**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 278/2022**

Deposition of **<u>D.W.-1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. Kokilavani, Gr. III Bench Clerk of this court, on 15.07.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சுந்தராஜன் Father's Name : அமரசாமி

துவக்க நேரம் :04.28P.M

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

1. எனது தகப்பனார் அமரசாமியும், வாதியும் சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தாத்தா காலத்திலேயே சுமார் 40 வருடங்களுக்கு முன்பு வாய் மொழியாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.அதனடிப்படையில் வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டு அவரவர்கள் பாகத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வாதிக்கும், எங்களுக்கும் பொதுவானது என்றால் சொத்துக்கள் மட்டும்தான் பொதுவானது, மின் இணைப்பு பொதுவானது அல்ல.

2. இநத வழக்கில் பிரதிவாதிகளாகிய எங்களுக்கு எதிராக ஒரு இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் மின் இணைப்பு குறித்து தடையுத்தரவு வழங்கப்படவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், தாவா சொத்து குறித்து இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் மின் கட்டண ரசீது எனது தாத்தா ஆதி நாராயணன் பெயரில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ரசீது எப்பொழுது வழங்கப்பட்டுள்ளது என்றால் கடந்த 1989-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ரசீதானது மின் இணைப்பு எண்.233/444 இணைப்பிற்காக வழங்கப்பட்டது என்றால் 2 மின் இணைப்பு களுக்கு ஒரே ரசீது வழங்கமாட்டார்கள், மேலும் இந்த

ரசீது வெவ்வேறு பேனாக்களால் எழுதப்பட்டுள்ளதாக தெரிகிறது.

3. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் கடந்த 2021-ஆம் ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டோம். என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை பத்திரம்தான் எங்களது குடும்பத்தில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் 10வது பக்கத்தில் பொது பாகத்தில் மின் இணைப்பு எண்.444 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் தவறுதலாக மின் இணைப்பு எண்ணை குறிப்பிட்டுவிட்டார்கள். மேற்படி மின் இணைப்பு யார் பெயரில் எந்த கிணற்றில் பொருத்தப்பட்டுள்ளது என்றால் செல்லாயி என்பவரது பெயரில் மின் இணைப்பு இருப்பதாக மின்சார அலுவலகத்தில் கூறினார்கள், யாருடைய கிணற்றில் இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

4. எங்கள் குடும்பத்திற்குண்டான பொது கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 267/1C1 ஆகும். மேற்படி கிணற்றில் எத்தனை HP மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது என்றால் 3 HP மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், தற்பொழுது 5 HP மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக 3 HP மோட்டார் என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி கிணற்றிலிருந்த 3 HP மோட்டாரின் மின் இணைப்பு எண். 444 என்றாலும், பின்னிட்டு 5HP மோட்டார் பொருத்தப்பட்ட பொழுது மின் இணைப்பு 233 என தற்பொழுது மாற்றப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

5. ச.எண்.267/1சி1-ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஏக்.0.20 செண்ட் ஆகும். மேற்படி ஏக்.0.20 செண்ட் நிலம் யார், யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எங்களின் தாத்தா ஆதிநாராயணனுக்கும், அவரது சகோதரர் சகாதேவனுக்கும் பொதுவில் பாத்தியப்பட்டது. மேற்படி ஏக். 0.20 செண்ட் நிலத்தில் உள்ள கிணறும் மேற்படி இருவருக்கும் பொதுவானது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் இருக்கும் மின் இணைப்பும் இருவருக்கும் பொதுவானது என்றால் சரியல்ல, மின் இணைப்பு எங்கள் தாத்தா ஆதிநாராயணன் தனிப்பட்ட முறையில் வாங்கியது. நான் சொல்வது தவறு என்றாலும், மின் இணைப்பு இருவரது பெயரில் வழங்கமாட்டார்கள் என்பதால் குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் ஆதிநாராயணன் பெயரில்

வழங்கப்பட்டது என்றாலும், ஆனால் மேற்படி மின் இணைப்பு வாதி, பிரதிவாதி குடும்பங்களுக்கு பொதுவானது என்றாலும் சரியல்ல.

6. கடந்த 40 ஆண்டுகாலமாக வாதி மேற்படி மின் இணைப்பின் மூலம்தான் அவரது நிலத்திற்கு விவசாயம் செய்து வந்தார் என்றாலும், நானும், எனது தாயாரும் அதனை தடுத்து தகராறு செய்ததால் வாதி ஆத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதனடிப்படையில் குற்ற எண். 48/2026 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் வழக்கு பதிவு செய்யப்பட்டது உண்மைதான், ஆனால் மேற்படி வழக்கானது எனது தாயாரை தவறாக பேசியதற்காக ஏற்பட்ட பிரச்சனைக்காக பதிவு செய்யப்பட்ட வழக்காகும். என்னிடம் காட்டப்படும் முதல் தகவலறிக்கை என் மீதும், எனது தாயார் மீதும் பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை என்றால் சரிதான். மேற்படி முதல் தகவலறிக்கை **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 04.59P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.278/2022, Dt. 15.07.2026.